## பாடம் - 8
### மாதவிடாய், பிரசவ இரத்தம்

## الدرس الثامن
### الحيض والنفاس

மாதவிடாய் அல்லது பிரசவஇரத்தம் ஏற்பட்ட பெண் அந்தக் காலங்களில் தொழுவதோ நோன்பு நோற்பதோ கூடாது. ஏனெனில்

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ النَّبِيُّ ﷺ : إِذَا أَقْبَلَتْ الْحَيْضَةُ فَدَعِي الصَّلَاةَ وَإِذَا أَدْبَرَتْ فَاغْسِلِي عَنْكِ الدَّمَ وَصَلِّي .(خ/ ٣٣١، م/ ٣٣٣)

'உனக்கு மாதவிடாய் வந்து விட்டால் தொழுகையை விட்டு விடு. மாதவிடாய் நீங்கிவிட்டால் இரத்தத்தைக் கழுவிவிட்டுத் தொழுது கொள்' என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: புகாரி(331), முஸ்லிம் (333)

விடுபட்ட தொழுகைகளை அவள் கழாச் செய்ய வேண்டியதில்லை. நோன்பைப் பொறுத்தவரை அவள் விட்டிருந்த நோன்புகளைக் கழாச் செய்ய வேண்டும். மாதவிடாய் ஏற்பட்ட பெண் கஃபாவைத் தவாஃப் செய்வது கூடாது. மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுடன் அவளது கணவன் உடலுறவு கொள்வது விலக்கப்பட்டதாகும். ஆனாலும் அவளிடம் உடலுறவு அல்லாத ஏnனைய இன்பங்களை அவன் அனுபவிப்பது கூடும். மாதவிடாய் ஏற்பட்டவள் திருக் குர்ஆனைத் தொடுவதும் கூடாது.

மாதவிடாய் ஏற்பட்டவள் அந்த இரத்தம் நின்றதும் அவள் தூய்மையாகி விடுவாள். அந்த நேரத்தில் அவள் குளிப்பது கடமையாகும். அதன் பிறகு அவளுக்கு தடுக்கப்பட்டிருந்த அனைத்தும் அவளுக்கு ஹலாலாகிவிடும். தொழுகை நேரம் வந்த பிறகு தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன் ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் அல்லது பிரசவத்தீட்டு ஏற்பட்டால் சரியான கூற்றின்படி அவள் தூய்மையானதும் அந்தத் தொழுகையை அவள் கழாச் செய்ய வேண்டும்.

தொழுகையின் நேரம் முடிவடைவதற்கு முன் ஒரு ரக்அத் தொழும் நேரத்தில் அவள் தூய்மையடைந்து விட்டால் அந்தத் தொழுகையை அவள் அவசியம் நிறைவேற்ற வேண்டும். அத்தொழுகையுடன் சேர்ந்துள்ள தொழுகையையும் அவள் கழாச் செய்வது விரும்பத்தக்கதாகும். உதாரணமாக சூரியன் மறைவதற்கு முன் ஒரு ரக்அத் தொழும் நேரத்தில் அவள் சுத்தமாகிவிட்டால் அஸர் தொழுகையை அவள் நிறைவேற்றுவது அவசியமாகும். அத்துடன் ழுஹர் தொழுகையைக் கழாச் செய்வது அவளுக்கு விரும்பத்தக்கதாகும். நள்ளிரவுக்கு முன் அவள் தூய்மையாகிவிட்டால் இஷாவை அவள் தொழுதுவிட வேண்டும். அத்துடன் மஃரிபைக் கழாச் செய்வது விரும்பத்தக்கது.